மாலை முரசு

பக்கங்கள் 16

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆவணி 30 சனிக்கிழமை 16.09.2023 அதிர்வு 47

ஒரு கோடி ரூபா பெறுமதியான

## ஐஸ் போதைப்பொருளுடன் யாழ். நகரில் ஒருவர் கைது!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் நகர் பகுதியில் ஒரு கோடி ரூபா பெறுமதியான ஐஸ் போதைப் பொருளுடன் ஒருவர் கைது 04

# தாவடியில் வீடொன்றின் மீது பெற்றோல் குண்டு வீச்சு ஐவர் காயம்; ஒரு தலைக் காதலால் நேர்ந்த விபரீதம்!



சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாவடி, வன்னியசிங்கம் வீதியிலுள்ள வீடொன்றில் மீது இன்று அதிகாலை 4.20 மணியளவில் பெற்றோல் குண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் 5 பேர் காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தாக்குதல் நடத்தப்பட்ட வீட்டிலிருந்த யுவதியொருவரை காதலித்த 04

## மூன்றெழுத்துடையவரே மொட்டுவின் வேட்பாளர் ஒன்றரை மாதங்களுக்குள் பகிரங்க அறிவிப்பாம்

### ரஞ்சித் பண்டார எம்.பி. தகவல்

“மூன்றெழுத்துடையவரே மொட்டுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர். இன்னும் ஒன்றரை மாதமளவில் அது தொடர்பில் பகிரங்கமாக அறிவிக்கக்கூடியதாக இருக்கும்.”

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாடா ளுமன்ற உறுப்பினரான பேராசிரியர் ரஞ்சித் பண்டார 04

## கோட்டாவை மீண்டும் அரசியலுக்குள் இழுக்க முயற்சிப்பது படுமுட்டாள்தனம்

### இப்படிக் கூறுகின்றது மொட்டுக் கட்சி

- சுடர் திலீபன் -

”முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச்ச மீண்டும் அரசியலுக்குள் வரமாட்டார் என்று நாம் நினைக்கின் றோம். ஏனெனில் அவர் மீண்டும் அரசியலுக்குள் வந்து முட்டாளாக விரும்பமாட்டார்.”

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 04

## மொட்டுவின் வேட்பாளராக ரணில் களமிறக்கப்படலாம்

### சாகர அதிரடி அறிவிப்பு



(சுடர் திலீபன்)

“ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கள மிறக்கப்படலாம்.”

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. தெரிவித்தார்.

“மூன்றெழுத்துடையவரே மொட் டுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர்.

இன்னும் ஒன்றரை மாதமளவில் அது தொடர்பில் பகிரங்கமாக அறிவிக்கக் கூடியதாக இருக்கும்“ – என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாடா ளுமன்ற உறுப்பினரான பேராசிரியர் ரஞ்சித் பண்டார தெரிவித்திருந்தார். இது தொடர்பில் பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் 04

# ராஜபக்ஷ குடும்பத்தினரின் மீளெழுச்சிக்கு இடமளியாதீர்!

### நாட்டை அழித்த அவர்களை நீதிமன்றம் முன் நிறுத்த வேண்டும் என்று சஜித் வலியுறுத்தல்



“ராஜபக்ஷ குடும்பத்தினர் தேசாபிமான பெருமிதத்துடன் பௌத்தத்தை முன்னிறுத்தி, மக்களை ஏமாற்றி நாட்டைக் காப்பாற்று கின்றோம் என்ற பெயரில் ஆட்சிக்கு வந்து இறுதியில் நாட்டின் வளங்களையும் பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றனர். நாட்டை நாசமாக்கிய அவர்களை நீதிமன்றத்தின் முன் நிறுத்த வேண் டும். அவர்கள் மீளெழுச்சி பெற எந்தப் பிரஜையும் துணைபோகக் கூடாது.” 04

# எரிபொருள் விலை மாற்றத்தால் மின் கட்டணத்திலும் திருத்தம்!

## 2024 இல் நடைமுறைக்கு வரவுள்ளது

எரிபொருள் விலை அடுத்த வருடத்தில் இருந்து மாற்றமடைய உள்ளது. இந்த நிலையில் அடுத்த வருடத்தில் இருந்து மின் கட்டண திருத்ததமும் மேற்கொள்ளப்படவுள்ளது என்று எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இவ்வாறு மின்சார கட்டணத்தை திருத்துவதற்கு தேவையான தரவுகளை வழங்குமாறு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இலங்கை மின்சார சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதன்படி தேவையான தரவுகள் விரைவில் வழங்கப்படும் என இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் ரொஹான் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

அடுத்த மூன்று மாதங்களுக்குத் தேவையான 54 பில்லியன் ரூபாவைக் கண்டறிய மின்சாரக் கட்டணத்தை முப்பத்திரண்டு வீதத்தால் உயர்த்துமாறு இலங்கை மின்சார சபை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் இரண்டு வாரங்களுக்கு முன்னர் கோரிக்கை விடுத்திருந்தது. ஆனால் ஆணையம் இதுவரை அதற்கு சரியான பதிலை அளிக்கவில்லை.

அடுத்த ஆண்டு மின்சார உற்பத்தி செலவை 87 சதவீதத்தால் குறைக்க மின்சார சபை தயாராகி வருகிறது. அதன்படி இயற்கை எரிவாயு மூலம் மின் உற்பத்தியை அதிகரிக்க முடிவு செய்துள்ளது.

இத்திட்டத்தைச் செயல்படுத்தினால், மின் கட்டணத்தை குறைக்கலாம் என்பது சபையின் எதிர்பார்ப்பு. மின்சார சபையின் உற்பத்தித் திட்டத்தின்படி 2026 ஆம் ஆண்டுக்குள் 2500 மெகாவாட் மின்சாரத்தையும், 2030ஆம் ஆண்டுக்குள் 3000 மெகாவாட் மின்சாரத்தையும் பெறுவதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு மின் சக்தி அமைச்சிடம் வழங்கப்பட்டுள் ளன.

மின்சார சபையின் மறுசீரமைப்பு வேலைத் திட்டத்தின் பிரகாரம், தேவைப் படும் ஊழியர்களின் எண்ணிக்கை குறித்த அறிக்கையும் எதிர்காலத்தில் அமைச்சுக்கு வழங்கப்படவுள்ளது.

தற்போது மின்சார சபையில் சுமார் 23 ஆயிரத்து 500 பணியாளர்கள் பணிபுரிகின்றனர். ஏழு மில்லியன் நுகர்வோருக்கு மின்சார சபையின் கீழ் மின்சாரம் வழங்கப்படுகின்றது.

# வெளிநாட்டுச் சிகரெட்டுகளுடன் கட்டுநாயக்காவில் பெண் கைது!

சட்ட விரோதமான முறையில் வெளிநாட்டு சிகரெட்டுக்களை நாட்டுக்கு கடத்தினார் என்ற குற்றச்சாட்டில் பெண்ணொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை (15) இரவு போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் அவர் கைது செய் யப்பட்டுள்ளார்.

டுபாயிலிருந்து வந்த பெண் ணொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து 17 லட்சம் ரூபா பெறுமதியான வெளி நாட்டில் தயாரிக்கப்பட்ட சிகரெட்டுக்கள் மீட்கப்பட்டுள்ளன.

புத்தளம் பிரதேசத்தில் வசிக்கும் 51 வயதான அந்தப் பெண் அடிக்கடி விமானம் மூலம் பொருள்களைக் கொண்டு வந்து இலங்கையில் விற்பனை செய்து வருபவர் என்று விசார ணையில் தெரிய வந்துள்ளது.



17 ஆயிரம் சிகரெட்டுக்கள் அடங்கிய 85 சிகரெட் பெட்டிகள் ஆடைகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் அவற்றை மீட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை போதைப் பொருள் ஒழிப்பு பிரிவு அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

# ரயிலில் மோதி இளைஞன் மரணம்

அனுராதபுரத்தில் இருந்து கொலன்னாவை நோக்கி எரிபொருள் ஏற்றிச் சென்ற ரயிலில் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று (15) இரவு 11.15 மணியளவில் மஹவ மடபொகுன பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். உயிரிழந்தவர் மஹவ மடபொகுன பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞன் என தெரிவிக்கப் படுகிறது.

இந்த மரணம் தற்கொலையா அல்லது விபத்தா என பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# ஊழல் எதிர்ப்புச் சட்டத்தை மீறினால் இனி இலகுவில் தப்பிக்கவே முடியாது!

## கடும் தண்டனைகள் உருவாகின்றன என்கிறார் விஜயதாஸ ராஜபக்ஷ

ஊழல் எதிர்ப்பு சட்டத்தை மீறுபவர்கள் இலகுவில் தப்பித்துக் கொள்ள முடியாதவாறு கடுமையான தண்டனைகள் உருவாக்கப்படுகின்றன.

அதனால் ஊழல் அற்ற நாட்டைக் கட்டியெழுப்ப இந்த சட்டத்தை முழுமையாக செயற்படுத்துவதற்கு அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் மற்றும் பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இவ்வாறு நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

15.09.2023 ஆம் திகதிமுதல் நடைமுறைக்கு வரும் ஊழல் எதிர்ப்பு சட்டம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோது இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்துள்ளவை வருமாறு–

லஞ்சம், ஊழல் மோசடியற்ற நாடொன்றை ஏற்படுத்துவதாக இருந்தால் இன்று (15) முதல் நடைமுறைக்கு வரும் ஊழல் எதிர்ப்பு சட்டத்தை யதார்த்தமாக்கிக் கொள்ள வேண்டும்.

இந்தச் சட்ட வரைபுக்குள் அதற்குத் தேவையான அனைத்து விடயங்களும் உள்வாங்கப்பட்டிருக்கின்றன.

இந்த ஊழல் எதிர்ப்பு சட்டம் நாட்டு மக்கள் பல நூற்றாண்டுகளாக எதிர்பாத்திருந்த கனவாகும். அதனால் இந்த சட்டத்தை முறையாக செயற்படுத்தி, மக்களின் கனவை நனவாக்க அனைத்து தரப்பினரும் தேவையான ஒத்துழைப்பை வழங்குவார்கள் என



நாங்கள் நம்புகிறோம்.

அரச துறைகளில் குறிப்பாக அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் அரச வளங்களை துஷ்பிரயோகம் செய்தல் ஊழல் மோசடி மற்றும் லஞ்சம் பெற்றுக் கொள்ளல் போன்ற நடவடிக்கைகளால் நாட்டின் பொருளாதாரத்துக்கு பெரியளவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் நீண்டதொரு கருத்தாடல் இருந்து வருகிறது.

அனைத்துத் தேர்தல்களின் போதும் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் கட்சிகளுக்கு மக்கள் வாக்களித்திருப்பது, இந்த லஞ்ச ஊழல் மோசடிகளை ஒழிப்பதாக வழங்கிய வாக்குறுதியின் அடிப்படையிலேயே.

எனினும் மக்கள் திருப்தியடையும் வகையில் இந்த லஞ்ச ஊழலை தடுப்பதற்கு ஆட்சிக்கு வந்த எந்த அரசுக்கும் இயலவில்லை.

அதற்குத் தேவையான சட்ட வரைபும் நாட்டில் ஏற்படுத்தப்பட்டிருக்கவும் இல்லை. அதே போன்று இதனைச் செயற்படுத்தும் அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளும் இதன் தேவைப்பாடு குறித்துக் கண்டுகொள்ளவில்லை.

அதனால் அதன் காரணமாக நாட்டின் பொருளாதாரம் வங்குரோத்து நிலைக்கு செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் சமவாயத்தில் நாங்கள் கைச்சாத்திட்ட நாடாக இருந்தாலும் அதற்கு ஏற்புடைய சட்ட திட்டங்களை நாங்கள் அமைக்கவில்லை.

ஊழல் எதிர்ப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் இதனைச்செயற்படுத்தும் நிறுவனங்களைப் பலப்படுத்துவதற்காகவே 21ஆம் அரசியலமைப்பு திருத்தம் ஊடாக சுயாதீன ஆணைக்குழுக்களை ஆரம்பித்தோம். அதற்குள் லஞ்ச ஊழல் ஆணைக்குழுவும் உள்ளடக்கப்படுகிறது.

என்றாலும் அதன் செயற்பாடுகள் மற்றும் சுயாதீனத்தன்மை தொடர்பாக நாட்டு மக்கள் திருப்தியடையவில்லை. அதனால் நாங்கள் நிதி, நிர்வாக அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதற்கு லஞ்ச ஊழல் ஆணைக்குழுவை அமைக்க நடவடிக்கை எடுத்தோம். அதன் பிரகாரமே ஊழல் எதிர்ப்பு சட்ட மூலம் அனுமதித்துக் கொள்ளப்பட்டது. ஏற்கனவே இருந்த சட்டத்திலும் பார்க்க நிறுவனத்தின் சுயாதீனத்தன்மை இதன் மூலம் பாதுகாக்கப்பட்டிருக்கிறது.

அத்துடன் பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளை பாதுகாக்கும் சட்டத்தில் சில குறைப்பாடுகள் காணப்பட்டன. அதனால் நாங்கள் புதிய சட்டம் ஒன்றை நாடாளுமன்றத்தில் அனுமதித்துக் கொண்டோம். இந்தச் சட்டமும் இன்று (15) முதல் நடைமுறைக்கு வருகிறது. –என்றார்.

# சிங்கப்பூரில் பெண் மரணம் விசாரணை நேற்று ஆரம்பம்!

சிங்கப்பூரில் கழுத்து அறுத்து கொலை செய்யப்பட்டார் என்று கூறப்படும் இலங்கை பெண்ணின் மரணம் தொடர்பான விசாரணை நேற்று முன்னெடுக்கப்பட்டது.

நீர்கொழும்பு பதில் நீதிவான் நெல்சன் குமாரநாயக்கவால் நீர்கொழும்பு வைத்தியசாலையில் மரண விசாரணை நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி தியவன்னா மல்வல பகுதியில் வசிக்கும் செவ்வந்தி மதுக குமாரி என்ற 33 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தப் பெண் தனது கணவரின் வேண்டுகோளுக்கு இணங்க சிங்கப்பூருக்குச் சுற்றுலா சென்றுள்ளார். அங்கு கணவரால் கழுத்து அறுத்துக் கொலை செய்யப்பட்டமை தெரிய வந்தது.

இவர்கள் இருவரும் கடந்த 2021 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டதாக கூறப்படுகிறது. 2022 ஆம் ஆண்டு கணவர் ஆஸ்திரேலியா சென்றுள்ளார். அதன் பின்னர், கணவரின் வேண்டுகோளின் பேரில், அந்த பெண் கடந்த 8 ஆம் திகதி சிங்கப்பூருக்குச் சென்றுள்ளார்.

கொலை செய்யப்பட்டதாக கூறப்படும் பெண்ணின் சடலம் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

நீர்கொழும்பு வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை இரத்தினபுரி பொது மயானத்தில் தகனம் செய்வதற்கு இறந்தவரின் தந்தையிடம் ஒப்படைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

## பேருவளை கிராம மக்களின் பாதுகாப்புக்கு பொலிஸ் குவிப்பு

பேருவளை சுனாமி கிராமத்தில் உள்ள வீடுகளின் பாதுகாபபுக்காக பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

பேருவளை சுனாமி கிராமத்தின் வீடுகள் மீது இரவும் பகலும் கல் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பில் ஆராய பேரு வளை பொலிஸ் நிலைய கட்டளை அதிகாரி பேருவளை கிராமத்துக்கு விஜயம் செய்தார். 68 வீடுகளில் வசிக்கும் மக்களை ஒரு கும்பல் கற்களை வீசி துன்புறுத் துகின்றது என்று 20இற்கும் மேற் பட்ட வீடுகளில் இருந்து பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

அதன்படி பொலிஸ் நிலைய கட்டளை அதிகாரி அந்த கிராமத்துக்குச் சென்று நிலைமைகளை ஆராய்ந்தார். மக்களின் பாதுகாப்புக்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் உறுதியளித்தார்.

# ஐ.நா. மனித உரிமை அறிக்கையில் இனிமேல் மலையகமும் இடம்பெறும்

## இலங்கைக்கான பிரதிநிதி உறுதி

"ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் இவ்வருட அறிக்கையில் மலையகம் பற்றி குறிப்பிடாமையை ஒரு குறைபாடாக ஐ.நாவின் இலங்கை பிரதிநிதி மார்க் – அந்தரே ஏற்றுக்கொண்டார். இது எதிர்காலத்தில் நிவர்த்தி செய்யப்படும் எனவும், இலங்கை ஐ.நா. நிகழ்ச்சி வலயத்தில் மலையகத் தமிழர்களின் பிரச்சினைகள், தேசிய நல்லிணக்கம் ஆகியவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்படும் எனவும் ஐ.நாவின் இலங்கை பிரதிநிதி உறுதியளித்தார்."

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

இலங்கைக்கான ஐ.நா. பிரதிநிதி மார்க் – அந்தரே, சமாதான சாளர ஒருங்கிணைப்பாளர் தாரக ஹெட்டியாராச்சி ஆகியோரை தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. சந்தித்தார். அவருடன் வேலுகுமார் எம்.பி. மற்றும் கட்சியின் கேகாலை மாவட்ட அமைப்பாளர் பரணீதரன் ஆகியோரும் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் கருத்துரைக்கும்போதே மனோ எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கையில், தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்க அலுவலகம், காணாமல்போனோர் அலுவலகம், உத்தேச உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு ஆகியவை இன்னமும் இழுபறியில் இருக்கின்றன. இரு தரப்பிலும் குற்றங்கள் நிகழ்ந்தன என்பதை ஏற்றுக்கொள்ள இலங்கை அரசு பிடிவாதமாக மறுக்கின்றமையே இதற்குப் பிரதான காரணம் என நான், முன்னாள் சமீபத்து தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் என்ற முறையில் சொன்னதை ஐ.நாவின் இலங்கை பிரதிநிதி மார்க்–அந்தரே அங்கீகரித்து ஏற்றுக்கொண்டார்.

15 இலட்சம் மலையகத் தமிழர் மத்தியில் சுமார் ஏழரை இலட்சம் பேர் இன்னும் பெருந்தோட்டங்களில் வாழ்கின்றனர். அவர்களில் ஒன்றரை இலட்சம் பேர் தோட்டத் தொழிலாளர்கள். இந்தப் பெருந்தோட்டங்களில் வாழ்கின்ற மக்களே இலங்கை சமூக பொருளாதார வளர்ச்சியில் மிகவும் பின் தங்கியவர்கள் என்ற தரவுகளுடனான ஆவணத்தை எழுத்து மூலமாக ஐ.நாவின் இலங்கை பிரதிநிதி மார்க் – அந்தரேக்கு நாம் வழங்கினோம்.

இலங்கை ஐ.நா. நிகழ்ச்சி வலயத்தில் மலையகத் தமிழர்களின் பிரச்சினைகள், தேசிய நல்லிணக்கம் ஆகியவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்படும் எனவும் ஐ.நாவின் இலங்கை பிரதிநிதி உறுதியளித்தார்." – என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### ராஜபக்ஷ குடும்பத்தினரின்...

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கேகாலையில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கொள்கைகளை மீறிக் கொண்டு நாட்டு மக்களை மறந்துவிட்டு தனிப்பட்ட பேராசைக்காக ஜனாதிபதிப் பதவியையும் பிரதமர் பதவியையும் பெற நாம் தயாராக இல்லை.

மொட்டுவின் 134 உறுப்பினர்களின் மட்டுப்படுத்தப்பட்ட ஆணையுடன் ஜனாதிபதிக் கதிரைக்குச் சென்ற தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மொட்டு திருடர்கள் குழுவின் பாதுகாவலராக மாறி தற்போது உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் உண்மையை மறைத்து வருகின்றார். நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் கூட முன்னைய ஆணைக்குழு அறிக்கையின் பிரதிகளைப் பெற்றுக்கொள்ள முடியாத விதமாக அவர் மறைத்து வைத்துள்ளார். உண்மையை மறைப்பதால் தேசிய பாதுகாப்புக்கே ஆபத்து ஏற்படும்.

பூரண அரசாட்சியைத் தருவதாகக் கூறினாலும் மக்கள் ஆணையின்றி ஜனாதிபதி பதவியையோ, பிரதமர் பதவியையோ, ஏனைய பதவியையோ, அரச அதிகாரத்தையோ பெற தாம் தயார் இல்லை.

நாட்டை அடிமைப்படுத்தி நாட்டின் வளங்களை அபகரித்த ஜனாதிபதியையும் குடும்பத்தையும் விரட்டியடிக்க மக்கள் ஒன்றாய் வீதியில் இறங்கி நடந்திய போராட்டத்தின் பின்னர் நல்லிணக்கம் என்ற வார்த்தை முக்கியமான அரச கொள்கையாக மாறியுள்ளது." – என்றார்.

### மொட்டுவின் வேட்பாளராக...

எம்.பியிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

"அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் வேளையில், தற்போதைய ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் உறுப்பினராகி ஜனாதிபதி வேட்பாளராக வரலாம்.

ஜனாதிபதி வேட்பாளரை முன்கூட்டியே முன்னிறுத்துவது எமது நோக்கமல்ல. ஜனாதிபதித் தேர்தல் வரும்போது நாட்டு மக்கள் எப்படிப்பட்ட வேட்பாளரை எதிர்பார்க்கின்றார்கள் என்பதைக் கணிக்க முடியாது.அதற்கமைய,மக்களின்எண்ணங்கள் மற்றும் விருப்பங்களைக் கருத்தில் கொண்டு வேட்பாளர் ஒருவர் நியமிக்கப்படுவார். அந்த வேட்பாளர் நிச்சயமாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் உறுப்பினராக இருப்பார்." – என்றார்.

### கோட்டாவை மீண்டும்...

பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

"மொட்டுக் கட்சியைக் கோட்டாபய வெறுக்கவில்லை.நாமும்அவரைவெறுக்கவில்லை. ஓய்வில் இருக்கும் அவரை மீண்டும் அரசியலுக்குள் கொண்டுவர முயற்சிப்பது படுமுட்டாள்தனம்." – என்றார்.

இதேவேளை, "கோட்டாபய அரசியலுக்கு ஒரு தடவை வந்தார். அதன்பின்னர் நாட்டில் ஏற்பட்ட குழப்பத்தால் அவர் ஒதுங்கிவிட்டார். அதிகாரத்தைத் தக்கவைக்க வேண்டும் என்பது அல்ல அவரின் நோக்கம். மீண்டும் அரசியலுக்கு வரும் அளவுக்கு வாழ்க்கையில் பக்குவம் இல்லாத நபர் அவர் அல்லர்" – என்று முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவை அண்மையில் சந்தித்த எம்.பிக்கள் சிலர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

### மூன்றெழுத்துடையவரே...

தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

"தங்கத்துக்கு ஏன் அதிக விலை? மாணிக்கம், முத்துகளுக்கு ஏன் மதிப்பு? அவை வீதியில் கொட்டிக் கிடந்தால் கருங்கல்லுக்குரிய மதிப்பே கிட்டும். எனவே, மொட்டுக் கட்சி ஜனாதிபதி வேட்பாளரும் பெறுமதிமிக்கவர், பதற்றப்பட வேண்டாம், உரிய நேரத்தில் அறிவிப்பு வரும்.

அரசியலில் 'நிராகரிப்பு' என்பது நிரந்தரம் இல்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் பயணம் இதற்குச் சிறந்த சான்று." – என்றார்.

### ஐஸ் போதைப்பொருளுடன்...

செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து ஒரு கிலோ 40 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

யாழ்ப்பாணம் பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலுக்கமைய கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 70 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### தாவடியில் வீடொன்றின்...

நபரொருவராலேயே இந்தத் தாக்குதல் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உரும்பிராயை சேர்ந்த இளைஞன் ஒருவரும், அவருடன் வந்த குழுவினருமே தாக்குதல் நடத்தியுள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த கும்பல் வீட்டுக்குள் நுழைந்து சொத்துக்களை சேதப்படுத்திய பின்னர், வீட்டுக்குள் பெற்றோல் குண்டு வீசியுள்ளது.

உரும்பிராயை சேர்ந்த இளைஞன், அந்த வீட்டிலுள்ள யுவதியில் ஒரு தலைக் காதல் கொண்டிருந்ததார் எனவும், அந்த யுவதியைத் தனக்குத் திருமணம் செய்து வைக்குமாறு பெற்றோரை மிரட்டி வந்தார் எனவும் கூறப்படுகிறது.

### புதிய தொழில் நுட்பங்களுடன் கூடிய

# நிபுணத்துவ பல்கலைக்கழகங்களை இலங்கையில் நிறுவுவதற்குத் திட்டம்

### கியூபாவில் வைத்து ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான தொழில்நுட்ப ஒத்துழைப்பின் விளைவாக, புதிய தொழில்நுட்பங்களில் நிபுணத்துவம் வாய்ந்த நான்கு புதிய பல்கலைக்கழகங்களை நிறுவும் இலங்கை திட்டமிட்டுள்ளது. காலநிலை மாற்றம் குறித்த உத்தேச சர்வதேச பல்கலைக்கழகத்தை அதன் ஐந்தாவது அமைப்பாக உருவாக்க நாங்கள் எதிர்பார்த்துள்ளோம்.

உலகெங்கிலும் உள்ள வளரும் நாடுகள் எதிர்கொள்ளும் தற்போதைய அபிவிருத்தி சவால்களை வெற்றிகொள்வதில் விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் முக்கிய பங்கை வகிக்க முடியும்.

இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கியூபாவின் ஹவானாவில் வெள்ளிக்கிழமை (15) ஆரம்பமான “ஜீ 77 மற்றும் சீனா” அரச தலைவர் உச்சி மாநாட்டில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கியூபா அதிபர் மிகுவல் டியாஸ் கேனல் பெர்முடெஸ் தலைமையில் மாநாடு இடம்பெற்றது. மாநாடு தொடங்கும் முன், இதில் பங்கேற்ற அனைத்து மாநில தலைவர்களும் குழு புகைப்படம் எடுத்துக்கொண்டனர்.

இந்த மாநாட்டைக் கூட்டியதற்காக கியூபா ஜனாதிபதி மிகுவல் டயஸ் – கனல் பெர்முடெஸைப் பாராட்டி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றினார்.

பல்வேறு பலதரப்பு மன்றங்களில் வளரும் நாடுகளின் இலக்குகள் மற்றும் அபிலாஷைகளை அடைவதில் கியூபாவின் வரலாற்று சாதனைகளையும் எடுத்துரைத்தார்.

அங்கு உரையாற்றிய ரணில் தெரிவித்தவை வருமாறு–

தொற்றுநோய்கள், காலநிலை மாற்றம், உணவு, உரம் மற்றும் எரிசக்தி நெருக்கடிகள் நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு தடையாக உள்ளன. மேலும், நிலைமை உலகளாவிய கடன் நெருக்கடியை மோசமாக்குகிறது மற்றும் இதன் காரணமாக உலகளாவிய தெற்கு நாடுகள் முன்னோடியில்லாத சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

15 ஆம் நூற்றாண்டில், துப்பாக்கி குண்டுகள், பீரங்கிகள் மற்றும் கடற்படைக் கப்பல்கள் போன்ற பகுதிகளில் ஐரோப்பாவின் முன்னேற்றங்கள் உலகின் பிற பகுதிகளை கைப்பற்ற உதவியது. இதன் விளைவாக இன்று உலகில் பல்வேறு தொழில்நுட்ப ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டுள்ளன.

அதிக விலை, சில தொழில்நுட்பங்களுக்கான வரையறுக்கப்பட்ட அணுகல், போதுமான டிஜிட்டல் திறன்கள் மற்றும்



உள்கட்டமைப்பு இல்லாமை, கலாச்சார மற்றும் நிறுவனத் தடைகள் மற்றும் நிதிக் கட்டுப்பாடுகள் போன்ற சவால்கள் இத்தகைய ஏற்றத்தாழ்வுகளுக்கு வழிவகுத்தன.

21 ஆம் நூற்றாண்டில், இந்தப் புதிய தொழில்நுட்ப ஏற்றத்தாழ்வு இன்னும் அதிகமாகக் காணப்படுகிறது. இடைவெளியைக் குறைக்க, டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் பிக் டேட்டா, இன்டர்நெட் ஆஃப் திங்ஸ் , செயற்கை நுண்ணறிவு, பிளாக்செயின், பயோடெக்னாலஜி மற்றும் ஜீனோம் சீக்வென்சிங் போன்ற புதிய தொழில்நுட்பங்களுக்கு விரைவாக திரும்ப வேண்டும்.

வளர்ச்சி முறைகளைப் பின்பற்றுவதற்கான செயல்முறையை எளிதாக்குவதற்கும், அந்த செயல்முறைகளைத் தொடருவதற்கும் தேவையான மாற்றங்களைச் செய்வதற்கு, வளரும் நாடுகளில் தேவையான அறிவு மற்றும் தொழில்நுட்பத்துடன் நன்கு படித்த பணியாளர்கள் இருக்க வேண்டும்.

தற்போது குறைவாகச் செயல்படும் விஞ்ஞானம், தொழில் நுட்பம் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களை மதிப்பீடு செய்வதற்கும், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க ஆணையகம் மற்றும் டிஜிட்டல் மாற்ற முகமை ஒன்றை நிறுவுவதற்கும் இலங்கை நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான தொழில்நுட்ப ஒத்துழைப்பின் விளைவாக, புதிய தொழில்நுட்பங்களில் நிபுணத்துவம் வாய்ந்த நான்கு புதிய பல்கலைக்கழகங்களை நிறுவும் இலங்கை திட்டமிட்டுள்ளது. காலநிலை மாற்றம் குறித்த உத்தேச சர்வதேச பல்கலைக்கழகத்தை அதன் ஐந்தாவது அமைப்பாக உருவாக்க நாங்கள் எதிர்பார்த்துள்ளோம்.

“ஜீ 77 மற்றும் சீனா” குழுவுக்குள் பயனுள்ள ஒத்துழைப்புப் பொறிமுறையின் தேவை உள்ளது. ஒரு தசாப்தத்துக்கு தங்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஒரு விதத்தை ஒதுக்குவதன் மூலம் உறுப்பு நாடுகள் சில தியாகங்களைச் செய்ய வேண்டும் என்று நான் பரிந்துரைக்க விரும்புகிறேன். அதன் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளைத் தக்கவைக்க உலகளாவிய தென்னகத்துக்கான அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகளுக்கான சமூகத்தைப் புதுப்பிக்க வேண்டும்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புத் துறையைத் தொடர்ந்து, டிஜிட்டல் மயமாக்கல், உடல்நலம், மருத்துவம், செயற்கை நுண்ணறிவு மற்றும் பசுமை ஹைட்ரஜன் போன்ற புதுப்பிக்கத்தக்க ஆற்றல் போன்ற துறைகளில் தொழில்நுட்பத் தளங்களை உருவாக்க பொது மற்றும் தனியார் துறை ஒத்துழைப்பது இன்றியமையாதது.

உலகளாவிய தெற்கிலிருந்து வடக்குக்கான மூளை வடிகால் விளைவாகப் படித்த பணியாளர்களின் இழப்பு, தெற்கில் அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புத் துறைகளின் வளர்ச்சிக்கு மற்றொரு அச்சுறுத்தலாக மாறியுள்ளது.

சீனா, இந்தியா, ஜப்பான் மற்றும் தென் கொரியா போன்ற நாடுகள் தங்கள் பணியாளர்களை வளர்ப்பதன் மூலம் அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகளை உருவாக்கியுள்ளன. எனவே, நமது படித்த தொழிலாளர்களின் இழப்புக்கு ‘குளோபல் நோர்த்’ இழப்பீடு வழங்குமாறு ‘குளோபல் சவுத்’ கோர வேண்டும்.

உலகளாவிய தெற்கின் நாடுகள் நெருக்கமான ஒத்துழைப்பைப் பேண உறுதியளிக்க வேண்டும். ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கும், சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்து கொள்வதற்கும் மற்றும் விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகளின் மாற்றும் திறனைப் பயன்படுத்தும் கொள்கைகளை உருவாக்குவதற்கும் கொழும்புத் திட்டத்தைப் போன்ற ஒரு திட்டத்தையும் நான் முன்மொழிகிறேன்.

புதிய ஹவானா பிரகடனத்தை ஆதரிப்பதற்கு இலங்கை அர்ப்பணிப்புடன் உள்ளது என்பதையும் வலியுறுத்த வேண்டும். “ஜீ77 மற்றும் சீனா” உச்சி மாநாட்டின் கூட்டுக் குரலை சர்வதேச சமூகத்துக்கு எடுத்துச் செல்வதில் அனைத்து உறுப்பு நாடுகளையும் இணைந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.– என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சட்டியை விமர்சிக்கும் பானை

தன்னிலை மறந்து முழு அரசியல்வாதி போல உபதேசம் உரைக்கும் தன் போக்கை இலங்கைக் கத்தோலிகத் திருச்சபையின் பேராயர் வணக்கத்துக்குரிய கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கைவிட மாட்டார் என்பது போலவே படுகின்றது.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட தமது கிறிஸ்தவ மக்களுக்காக அவர் குரல் எழுப்புகின்றமை நியாயமானதுதான். ஆனால் அதை ஒட்டித் தாம் என்ன பேசுகின்றோம் என்பதை அவர் ஒரு தடவை சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்படி பேசுவதற்கு திருச் சபையின் உயர்ந்த பணியாளராகத் தமக்கு அருகதை - நியாயம் - உண்டா என்பதையும் அவர் சிந்திக்க வேண்டும்.

ஈஸ்டர் தொடர் குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் அவரது கிறிஸ்தவ மக்களே. அதற்காக அவர் குரல் எழுப்பத்தான் வேண்டும். ஆனாலும் அது விடயத்தில் தன்னிலை - தனது கடந்தகால நடத்தை - மறந்து, எல்லை மீறி, அவர் பேசக்கூடாது.

பாடுகளைச் சுமக்கும் மக்களுக்காகக் குரல் எழுப்புவதில் பாகுபாடு காட்டக் கூடாது என்ற உயரிய மனித விழுமியம் புரியாமல் அவர் அதிகம் பேசுகின்றார்.

பல சமயங்களில் அவரின் பேச்சு 'சட்டியைப் பார்த்து பானை கறுப்பு எண்டதாம்' என்ற மாதிரி இருப்பதுதான் அவமானகரமானதாகும்.

பமுனுகம உஸ்கெட்டகொய்யாவ புனித மரியாள் தேவாலயத்தில் நடைபெற்ற பொன்விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் ஒரு விடயத்தைக்கூறி இருக்கின்றார்.

"நமது நாட்டில் ஒரு சட்டம் இல்லை. இரு சட்டங்கள் உள்ளன. சாதாரண பொலிஸ் உத்தியோகத்தருக்கு ஒரு சட்டமும், பொலிஸ் அத்தியட்சகருக்கு இன்னும் ஒரு சட்டமும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. வழக்கு ஒன்றில் குற்றவாளி ஒருவருக்கு அபராதம் விதிக்கப்பட்டால் அதனை கட்டும் வரை அவரை விளக்கமறியலில் வைத்திருப்பர். எனினும் சில அரசியல்வாதிகள் குற்றவாளிகள் என அறிவிக்கப்படும் போது, அவர்கள் சுதந்திரமாகச் சென்று அபராதப் பணத்தைத் தேட தேவையான காலம் வழங்கப்படுகின்றது." - என்று அவர் கூறியிருக்கிறார்.

அவர் கூறியது உண்மைதான். அவர், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிற்சேனாவை இலக்கு வைத்து அந்தக் கதையைக் கூறியிருப்பார் போலும்.

ஆனால், இந்த இரட்டை வேடப் பேச்சும் நடத்தையும் என்ற குற்றச்சாட்டுத் தொப்பி வெறுமனே அரசியல்வாதிகளுக்கோ, பொலிஸாருக்கோ மட்டும் உரியதல்ல, கர்தினால் மக்கம் ரஞ்சித் என்ற - திருச்சபையின் பெயரில் அரசியல் நடத்தும் - தம்மைப் போன்ற மதத் தலைவர்களுக்கும் பொருந்தும் என்பதை அவர் மறந்து விட்டமைதான் வேடிக்கை.

2009 மே வரையில் யுத்தத்தின் பெயரால் அப்பாவித் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்ட போது, மௌனம் காத்து, அக்கொடூரங்களைக் கண்டிக்காமல் அங்கீகாரம் தந்த பெரும் மதத் தலைவர் அவர். ஈஸ்டர் குண்டு தாக்குதல் அழிவுகளை விட மிக மோசமான கொடூர மனித பேரழிவுத் தாக்குதல்கள் வன்னியில் ஈழத் தமிழினத்திற்கு எதிராக இழைக்கப்பட்டபோது அதீத மௌனம் காத்து, சிங்கள - பௌத்த பேரினவாதிகளுக்குத் துணை போன தமது சுயநடத்தையே மறந்து இப்போது பொலிஸார், அரசியல்வாதிகளை இரட்டை வேடதாரிகள் என்ற சாரப்பட அவர் குற்றச்சாட்டுவது, அப்படியே தமக்கும் கனகச்சிதமாகப் பொருந்தும் என்பதை அவர் மறந்திருப்பது வேடிக்கையே.

## கொழும்புத் துறைமுக உணவகங்களை 2027 இல் அகற்றுவதற்கு நடவடிக்கை

கொழும்புத் துறைமுக நகரத்தில் அமைக்கப்பட்டுள்ள உணவுக் கூடங்கள் 2027ஆம் ஆண்டு மார்ச் மாதத்துடன் அகற்றப்படும் என்று கொழும்புத் துறைமுக நகரப் பொரு ளாதார ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

வெளிநாட்டை இலக்குவைத்து வடிவமைக்கப்பட்டுள்ள கொழும்பு துறைமுக நகரத்தில் இதுபோன்ற உணவுக் கூடங்கள் அமைக்கப்பட்டிருப்பதன் சட்ட ஏற்பாடுகள் குறித்து அரச நிதி பற்றிய குழு வினவியமைக்குப் பதிலளிக்கும் போது இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அரச நிதி பற்றிய குழு அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ.த சில்வா தலைமையில் அண்மையில் (12) கூடியபோதே இந்த விடயம் கலந்துரையாடப்பட்டது.

இதில் எதிர்வரும் 19 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக் கக் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக் குழு சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் குறித்து ஆராயப்பட்டன.

எந்த சட்ட அடிப்படையில் அவ்வாறான உணவுக் கூடங்களை அமைப்பதற்கு அனுமதி வழங்கினீர்கள், எந்த அடிப்படையில் அவற்றை 2027ஆம் ஆண்டு அகற்றுவதற்குத் திட்டமிட்டுள்ளீர்கள் என்று அரச நிதி பற்றிய குழு, ஆணைக்குழுவின் உறுப்பினர்களிடம் வினவியது. இது தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்பட்டதா என்றும் கேள்வியெழுப்பியது.

இது விடயம் தொடர்பான தகவல்களைக் கூடிய விரைவில் குழுவில் சமர்ப்பிக்குமாறு கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்துக்குப் பரிந்துரைக்கப்பட்டது.

துறைமுக நகரத்தில் தற்பொழுது முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளால் அரசுக்குக் கிடைத்திருக்கும் வருமானம் தொடர்பிலும் குழு மேலும் கேள்வியெழுப்பியது.

எனவே, குறித்த ஒழுங்குவிதிக்கு அனுமதி வழங்க முன்னர் முழுமையான புரிதலை ஏற்படுத்திக் கொள்ள சம்பந்தப்பட்ட சகல தகவல்களையும் வழங்குமாறும் குழு அறிவுறுத்தல் வழங்கியது. ஸ்மார்ட் சிட்டி எண்ணக்கருவுக்கு அமைய தனியான நிலப்பரப்பில் துறைமுக நகரம் அமைக்கப்பட்டிருக்கும் நிலையில், ஸ்மார்ட் சிட்டியில் கழிவுநீர் முகாமைத்துவம், புதுப்பிக்கத்தக்க சக்தி, உரிய வடிகாலமைப்புக்கான பொறிமுறைகள் காணப்படு கின்றனவா என்றும் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக் குழுவின் உறுப்பினர்களிடம் வினவியது.

கழிவுநீர் முகாமைத்துவம் மற்றும் வடிகாலமைப்புத் தொடர்பில் நாட்டின் ஏனைய பகுதிகளில் கிடைத்த அனு பவம் துறைமுக நகரத்தை அமைக்கும்போது தவிர்க்கப்பட வேண்டும் என்பது குழுவின் நிலைப்பாடாக இருந்தது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை, நீர்வழங்கல் சபை போன்ற அரச நிறுவனங்கள் துறைமுக நகரின் கட்டுமானம் மற்றும் அபி விருத்தியில் பெருந்தொகையான பணத்தைச் செல விட்டமையும் இங்கு தெரியவந்தது. இவை அனைத்தும் வரி செலுத்தும் நாட்டு மக்களின் பணம் என்பதால் இதனால் நாட்டுக்குக் கிடைக்கும் நன்மைகள் யாவை என்றும் குழு கேள்வி எழுப்பியது.

இதற்கமைய துறைமுக நகரம் மற்றும் உட்கட்டமைப்புக்கு அரசு மேற்கொண்ட செலவுகளின் வகைப்படுத்தல் மற்றும் வருமானம் கிடைக்கும் மார்க்கங்கள் பற்றிய விவரங்களை வழங்குமாறும் அரச நிதி பற்றிய குழு, ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தியது.




# இலங்கையின் மௌனம் இருளையே ஏற்படுத்தும்!

## உலக தமிழர் பேரவை காட்டம்

குற்றச் செயல்களுக்கு பொறுப்பு கூறாத நிலைமை இலங்கையில் தொடர்வது மேலும் பேரழிவுகளையும் இருளையும் ஏற்படுத்தும் என்று உலக தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக உலக தமிழர் பேரவையால் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு–

அண்மையில் பிரித்தானியாவின் சனல் 4 ஊடகம் வெளியிட்ட காணொளியில் ராஜபக்ஷ குடும்பத்துக்கு நெருக்கமான அரச உத்தியோகத்தர்கள் 2019 உயிர்த்த ஞாயிறு தற்கொலை தாக்குதல்களின் பின்னணியில் செயற்பட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த தாக்குதல் சம்பத்தில் 45 வெளிநாட்டுப் பிரஜைகள் உள்ளிட்ட 270 பேர் கொல்லப்பட்டிருந்தனர். இனவாதத்தை தூண்டி நாட்டில் பாதுகாப்பற்ற நிலையை உருவாக்கி அதன் மூலம் ஆட்சியை மீளக் கைப்பற்றும் நோக்கில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த அதிர்ச்சியான பின்னணி இலங்கையில் வாழும் எவரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்காது என்பது வேதனை மிகுந்த யதார்த்தமாகும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக வெளியிடப்படும் தகவல்கள் உண்மை இல்லை என்பது அநேகரால் புரிந்து கொள்ளப்பட்ட ஒன்றாகும். உண்மையில் இனங்களுக்கு இடையிலான முரண்பாடுகளை ஏற்படுத்தி அதன் ஊடாக உயிர்களைக் காவு கொடுத்து அரசியல் அதிகாரங்களை கைப்பற்றுவதும் கவிழ்ப்பதும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு நடைமுறையாகவே கருதப்படுகின்றது.

இந்த மோசமான கலாச்சாரம் காரணமாக இலங்கையின் நீதிமன்றக் கட்டமைப்பால், எப்பொழுதும் உண்மையையும் நியாயத்தையும் வழங்க முடியாது என்ற அசைக்க முடியாத நம்பிக்கை மக்கள் மத்தியில் உருவாக்கியுள்ளது.

உயிர்த்த ஞாயிறுத் தற்கொலை தாக்குதல் சம்பவம் தொடர்பில் சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர்களும் கத்தோலிக்க தலைவர்களும் விடுக்கும் கோரிக்கைக்கு உலக தமிழர் பேரவை வலுவான ஆதரவை வழங்குகின்றது.

இந்தத் தருணத்தில் சனல் 4 ஊடகத்தால் இதற்கு முன்னர் கடந்த 2011 ஆம் ஆண்டு ஜ"ன் மாதம் வெளியிடப்பட்ட கொலைக்களம் என்ற காணொளியை நினைவு கூறுகின்றோம். இலங்கைத் தமிழ் பெண்கள் மற்றும் ஆண்கள் நிர்வாணமாகக் கண்கள் கட்டப்பட்ட நிலையில் இலங்கை படையினரால் சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்படும் காட்சிகள் இந்த காணொளியில் வெளியிடப்பட்டிருந்தது.

இந்த விவகாரம் உலக சமூகத்தை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியதுடன் ஐக்கிய நாடுகள் விசாரணைகள் மற்றும் தடைகள் விதிக்கப்பட வேண்டும் என கோரப்பட்டிருந்தது.

எனினும் இலங்கை அரசு இந்தக் காணொளி போலியானது எனவும் இது நாட்டின் பெரும்பான்மை சமூகத்துக்கு எதிரான சதித்திட்டம் எனவும் அரசுகள் கூறி வந்தன.

நாட்டில் இடம் பெற்ற குற்ற செயல்கள் பொருளாதார குற்றச்செயல்கள் என்பன வற்றுக்காகத் தண்டனை விதிக்கப்படாத நிலைமை அல்லது பொறுப்பு கூறப்படாத நிலைமை தொடர்ந்தும் நீடித்து வருகின்றது.

உறுதியான ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றாலும் குற்றவாளிகளை தண்டிக்க வலியமையற்ற நிலைமை நீடித்து வருகின்றது.

இலங்கையைக் கடந்த 14 ஆண்டுகளாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை கண்காணித்து வருகின்றது. மீண்டும் ஒரு தடவை இலங்கை விவகாரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் ஆணையாளர் வால்கர் ட்ரக் கருத்து வெளியிட்டிருந்தார்.

அண்மையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் ஊழல் மோசடிகள் அதிகார துஷ்பயோகங்கள் தொடர்பில் அவர் கருத்து வெளியிட்டிருந்தார். இந்த பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்படாது நாட்டை முன்னோக்கி நகர்த்த முடியாது என அவர் குறிப்பிட்டு இருந்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை

(08 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையின் மௌனம்...

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேரவையின் ஆணையாளரால் வெளியிடப்பட்ட அறிக்கையை உலக தமிழர் பேரவை வரவேற்பதாகவும் இலங்கை தொடர்ச்சியாக அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியுள்ளதாகவும் குறிப்பாக நீதி, பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கம் போன்ற விவகாரங்களில் அரசு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற தவறியுள்ளதாகவும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசால் குற்ற செயல்களுக்கு பொறுப்பு கூறக்கூடிய ஓர் நிலை உருவாக்கப்படாது.

வடக்கு கிழக்கு பகுதியில் சில பௌத்த பிக்குகள் தமிழர்கள் மீது கடும்போக்கு வாதத்தை கட்டவிழ்த்து விட்டுள்ளதாகவும் புதிய விகாரைகளை அமைத்து வருவதாகவும், பௌத்தர்கள் இல்லாத பகுதிகளில் விகாரைகள் அமைக்கப்பட்டு வருவதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

உள்ளூர் தமிழ் மக்கள் மத வழிபாடுகளில் ஈடுபடுவதற்கும் பொருளாதார செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கும் தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கையானது மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும், அரசு இது குறித்து எவ்வித நடக்க வைக்கும் எடுக்கவில்லை.

இந்த விவகாரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை கவனம் செலுத்த வேண்டும் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இலங்கை அரசுகள் காத்திரமான தீர்வு திட்டங்களை வழங்குவதற்கு மாறாக சர்வதேச சமூகத்தின் கண்காணிப்பில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கான ஏற்பாடுகளில் அதிகம் முனைப்பு காட்டி வருகின்றது.

ஆணைக்குழுக்களை நிறுவி அதன் மூலம் காலத்தை விரயமாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது. கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஆணைக் குழுக்கள் விசாரணைக் குழுக்களை நிறுவி, மனித உரிமைகள் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் இது வரையில் எந்த ஒரு ஆணைக் குழுவாலும் காத்திரமான தீர்வுத் திட்டம், பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைக்கப்பெறவில்லை.

அண்மையில் சனல் 4 ஊடகத்தால் வெளியிடப்பட்ட காணொளி தொடர்பிலும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நிறுவி அல்லது ஓய்வு பெற்ற நீதிபதிகளின் உதவியுடன் ஆணைக்குழு நிறுவி அதன் மூலம் காலத்தை விரயமாக்கி இந்த பிரச்சினையைத் திசை திருப்பும் முயற்சியில் ஈடுபடும் என்பதில் ஐயமில்லை.

2015 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை காலமாறு நீதி பொறிமுறை குறித்த விவகாரங்களில் இலங்கையுடன் இணைந்து செயற்பட்ட போதும் இதே விதமான அணுகுமுறையையே பின்பற்றியது.

இவ்வாறான ஒரு பின்னணியில் இலங்கையில் உண்மை மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் பொறிமுறை பாதிக்கப்பட்டவர்களுக்கு நன்மை அளிக்கக்கூடிய வகையில் அமையும் என்பது சந்தேகமேயாகும்.

சர்வதேச ரீதியான விசாரணைகளைத் தவிர்க்கும் அல்லது அவற்றிலிருந்து விடுபடும் நோக்கிலேயே அரசு செயற்பட்டு வருகிறது . பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் வழங்குவதற்கு முனைப்பு காட்டப்படவில்லை .

உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியான குற்ற செயல்களுக்குப் பொறுப்புக் கூறக் கூடிய ஓர் பின்னணியை உருவாக்குமாறு இலங்கை மக்களிடமும் அதன் தலைவர்களிடமும் கோருகின்றோம்.

இலங்கையின் குற்றச் செயல்களுக்கு பொறுப்பு வழங்காத கலாசாரத்தை மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கையை உன்னிப்பாக கவனிக்க வேண்டும்.- என்றுள்ளது.








## மடு கல்வி வலயத்தில் சாதனையாளர் கௌரவிப்பு.

(மன்னார் நிருபர்)


மன்னார் மடு கல்வி வலய சாதனையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை (15) வலயத்தில் வலயக்கல்வி பணிப்பாளர் தலைமையில் இடம் பெற்றுள்ளது.

மடு வலயத்தில் இருந்து 2023 ஆம் ஆண்டு மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மற்றும் உயர் தர பரீட்சையில் சாதனை நிலைநாட்டிய மாணவர்களையும் கௌரவிக்கும் வகையில் இந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வைத்திய கலாநிதி எம்.கதிர்காமநாதன், சமூக சேவையாளர் யதீஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கௌரவிப்பு நிகழ்வில் வெற்றியாளர்களுக்கு நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது.





# யாருக்குத்தான் ஆசையில்லை...

இன்றைய நவநாகரிக உலகில் நாமனைவரும் எமது அடிப்படைத் தேவைகளுள் ஒன்றாக எம்மை அழகுபடுத்துதலையும் உள்ளடக்க வேண்டிய கட்டாயத்திலுள்ளோம்.

என்றும் பதினாறாக வாழ யாருக் குத்தான் ஆசையில்லை? இந்த ஆசை யின் அடிப்படையில் முழத்துக்கு முழம் முளைத்தவைதான் அழகுக்கலை நிலையங்கள்! கூந்தலின் அழகைப் பேணாத மனிதருண்டோ?

இளவயதில் இருபாலரும் கவலைப் படும் ஒரே விடயம் ஒன்றுண்டென்றால் அது முடி உதிர்தல் பிரச்சினை தான் . அது வயதாவதை எமக்கு அறிவிக்கும் இறைவனின் செய்தி. இயற்கையின் இயல்பான ஏற்பாடு. அதனை ஏனோ எம்மனம் ஏற்க மறுக்கிறது. இது நிற்க!

அடுத்ததாக இருக்கும் பூதாகரமான பிரச்சினை முடி நரைத்தல் ! இப்போ தெல்லாம் இளநரை என்று , சிறு வயதிலேயே முடி நரைக்க ஆரம்பித்து விடுகிறது. அது பல உளச் சிக்கல்களை இளையோருக்குத் தோற்றுவிக்கிறது.

நரை ஏற்படப் பரம்பரைக் காரணிக ளும், பழக்கவழக்கங்களும், போசாக் குக் குறைபாடுகளும் ஏதுக்களாக இருந்தாலும் , அதை உடனடியாக மாற்றுவதற்கு இருக்கும் ஒரே தீர்வு முடிச் சாயம் மட்டுமே!

அதிக விலையானவை, மிக மலி வானவை, பௌடர் வடிவில் வருபவை, திரவ மற்றும் பசை வடிவில் வருபவை என்பவற்றோடு தற்காலத்தில் சம்போ வடிவிலும் கூட முடிச்சாயங்கள் சந் தைக்கு வருகின்றன. இயற்கையின் ஏற்பாட்டை நாம் மாற்ற இவற்றுள் ஒன்றைத் தேர்வு செய்கிறோம்.

முடிச் சாயம் உடலுக்கு ஒத்து வரு கிறதா? என சுயபரிசோதனை செய்யும் முறைகள் அதன் அறிவுறுத்தல்களில் கூறப்பட்டிருந்தாலும் யாரும் அவற்றைப் பின்பற்றுவதில்லை. எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் இரண்டு மாத்திரைகளை அருந்தி விட்டு டை அடிப்பதைப் பார்த்திருக்கி றேன். அவரிடம் அவ்வளவாக முடி யில்லை என்றாலும் அவர் "டை அடிப்பதை நிறுத்த முடியவில்லை." என்றார். "ஏனிந்த மாத்திரைகள்?" என்றேன். அவை அலர்ஜியைக் கட்டுப்படுத்த பிறிற்றோனும் இன்னும் ஏதோ ஒரு மாத்திரையும் எனப் பெயர் குறிப்பிட்டார். ஆனால் நான் கூற வருவது ஹெயார் டை அலர்ஜி ஆக இருந்தாலும் நாம் அதையே கைக் கொள்ள விரும்புகிறோம் என்பதே!

"நான் இயற்கையான மருதாணி டை என்று சொல்லப்படும் "ஹெனா" தான் பாவிக்கிறனான். அதில பாருங்கோ "அமோனியா பிறீ" என்று போட்டிருக்கு, "சைட்எபக்ட்" இல்லை." என்று புத்திசாலித்தனமாகக் கதைப் பவர்களும் அறிய வேண்டும். இர சாயனக் கலப்பற்ற இயற்கை முடிச் சாயம் என்று ஒன்றில்லை.

நான் சிறுவனாயிருந்த காலத்தில் எனது அம்மம்மா தலைக்கு எண்ணெய் வைத்த கைகளால், கொண்டை போட்ட பின், அடுப்பில் வைத்த கரிச்சட்டியைத் தொட்டுத் தலையில் தடவி , டாலடிக்கும் வெள்ளை முடியை டல்லடிக்கும் கரு முடியாக்கியதை பார்த்திருக்கிறேன். அதுதான் உண்மையான இயற்கைச் சாயம். இப்பொழுது யாரும் அப்படிச் செய்ய முன்வருவார்களா?

விளைவு ! முடிச்சாய விற்பனை யாளர்கள் காட்டில் பணமழைதான்! முடி ஆங்கொன்றும் ஈங்கொன்றுமாக நரைத்திருக்கச் சாயம் பூச ஆரம்பித்து விட்டாலோ முழுவதுமாக நரைத்து விடும். காரணம் அவ்வளவும் இரசாய னம்! உடல் நலம் பற்றி எள்ளளவேனும் எண்ணமின்றி தொடர் விற்பனையை மேம்படுத்த நிறுவனங்கள் செய்யும் சதி வலையில் எம்மையறியாமலே சிக்கிக் கொள்கிறோம்.

சமீபகாலமாக நான் வெண்குஷ்டம் வந்தவர்கள் பலரைப் பேட்டி கண் டுள்ளேன். அவர்கள் சொல்லும் கதை தமக்கு வெண்குஷ்டம் வரக் காரணம் தாம் உபயோகித்த முடிச் சாயம் தான் என்பதே! "முடிக்கு டை அடிச்சுக் கொண்டு வயலுக்க வேலை செய்து போட்டு முழுகுவம் என்று கன நேரம் வெய்யிலுக்க நின்றுதான் எனக்கு வாயிலும் தலையிலும் வெண்குஷ்டம் வந்தது. " இது கிளி நொச்சியைச் சேர்ந்த குமார் என்ப வரின் கருத்து !

பத்தரமுல்லையிலிருந்து கோட்டை வரை என்னருகிலிருந்து பயணித்த மெனிக்கே எனும் வயோதிப மாது தற்போதும் செய்வதறியாது முடிச்சாயம் உபயோகித்து வருவதாக வும் , தனக்கு வெண்குஷ்டம் "ஹெனா" வால்தான் வந்தது என்றும், தான் டை அடித்தபின் பல மணி நேரம் வீட்டு வேலைகள் சமையல் அனைத்தையும் நிறைவு செய்த பின்னரே தலையைக் கழுவுவதாகவும் , அதனால் மண்டை , பின் கழுத்துப்பகுதிகளும் பாதிக்கப்பட் டுள்ளதாகவும் கூறினார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிவநாதன் என்பவர் கூறும்போது " நான் ஹெனா டையை மூன்று நாள்களுக்கு ஒருமுறை மீசைக்கு அடிப்பேன். அதனால் தான் எனது வாயில் வெண்குஷ்டம் வந்தது," என்றார். (பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன)

ஆக, முடிச்சாயம் எதுவானாலும் அதன் அளவுக்கு மிஞ்சிய பாவனை எமது அழகை இன்னமும் பாழாக்கக் கூடும் என்பதே உண்மை!

சமீப காலமாக தமிழக திரைத் துறையினர் தமது பொது வாழ்வில் இயல்பான நரை முடியோடு காட்சித ருவது அதிகரித்துள்ளது. இவ்விடயத் திலும் அவர்களைப் பின்பற்றுவது எமது ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும்.

இயற்கைக்கு சாயமடித்தால் செயற்கை (தோலில்)சாயமடிக்கும் அவதானம்!

**என். கே. கஜரூபன்.**

# தியாக தீபம் திலீபனின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள்





## விசுவமடுவில்...

தியாக தீபம் திலீபனின் 36 ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று விசுவமடு தேராவில் புதிய நிலா விளையாட்டு மைதானத்தில் உணர்வு பூர்வமாக ஆரம்பமாகியது.

தியாக தீபம் திலீபன் உண்ணா நோன்பு ஆரம்பித்த நேரமான காலை 9.45 மணிக்கு மாவீரரின் பெற்றோரால் பொதுச் சுடரேற்றப்பட்டு நிகழ்வு ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், முல்லைத்தீவு மாவட்ட சமூக செயற்பாட்டாளர்கள், பொது மக்கள் அஞ்சலி செலுத்தினர்.





## அம்பாறையில்...

(பாறுக் ஷிஹான்)

தியாக தீபம் திலீபனின் 36 ஆவது நினைவேந்தலை முன்னிட்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் பொத்துவில் தொடக்கம் நல்லூர் வரையான திலீபன் நினைவு ஊர்திப் பயணம் பொத்துவில்லில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இளைஞர் அணியின் அம்பாறை மாவட்டத் தலைவர் துசானந்தன் ஏற்பாட்டில் பொத்துவில் முதல் பெரிய நீலாவணை வரையான மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

பொத்துவில்லில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பவனியானது வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தழுவிய ரீதியில் அனைத்து மாவட்டங்கள் ஊடாகவும் பயணித்து இறுதியில் நல்லூரில் அமைந்துள்ள திலீபன் நினைவுத் தூபிவரை சென்று நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் செயலாளருமான செல்வராசா கஜேந்திரன், கட்சியின் முக்கியஸ்தர் சட்டத்தரணி காண்டீபன், தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.







## பரிஸ் ஆர்யெந்தே நகரில் ...

தியாக தீபம் திலீபனின் தியாகப் பயணத்தின் ஆரம்ப நாளின் 36 ஆம் ஆண்டு நினைவுடன் புலம்பெயர் நாடுகளிலும் நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன.

பரிசின் புறநகர பகுதியான ஆர்யெந்தே நகரில் அமைப்பட்ட நினைவுக் கல்லின் முன்பாக நேற்றுக் காலை நினைவு நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன.

ஆர்யெந்தே வாழ் தமிழ் மக்களுடன் தமிழ்ச் சங்க உறுப்பினர்கள் மற்றும் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு உறுப்பினர்களும் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.





# பெரியகல்லாறு பாடசாலைக்கு லண்டன் அமைப்பால் தளபாடம்

(பழுவூரான்)

பெரிய கல்லாறு உதயபுரம் தமிழ் மகா வித்தியாலயத்தின் கற்றல் செயற்பாடுகளுக்காக தளபாடங்களைப் பெற்றுத் தருமாறு பாடசாலை அதிபர் விடுத்த வேண்டு கோளுக்கிணங்க 22 மரத் தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

லண்டனைத் தளமாகக் கொண்ட ஒருபானை அமைப்பால் நேற்று வெள்ளிக்கிழமை (15) இவை கையளிக்கப்பட்டன.

பாடசாலை அதிபர் 87 மரத் தளபாடங்கள் பெற்று தரும்படி வேண்டுகோள் விடுத்திருந்த நிலையில் முதல் தொகுதி அதிபரிடம் வழங்கப்பட்டது.



ஒரு பானை தொண்டு நிறுவனத்தில் மட்டக்களப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் அறங்காவலரும், சிவானந்தா வித்தியாலய லண்டன் கிளையின் பழைய மாணவர் சங்க ஆலோசகருமான வைத்திய கலாநிதி பாலசுப்பிரமணியத்தால் இவை வழங்கப்பட்டன. கையளிப்பு நிகழ்வில், அமைப்பின் பிரதிநிதிகளான ஜே. சாய்ராஜன், ஆர். முருகதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது பாடசாலையில் கல்வி மற்றும் விளையாட்டுத் துறையில் சாதனை படைத்த மாணவர்களுக்கு , விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

# தாழ்வுபாடு - கீரி கடற்கரை துப்புரவு





(மன்னார் நிருபர்)

தாழ்வுபாடு மீன்பிடிப் பகுதி தொடங்கி கீரி கடற்கரை வரையான பிரதேசத்தில் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஹரிற்ராஸ் வாழ்வுதயம் நிறுவனத்தின் சூழல் பாதுகாப்பு பிரிவினரும், மன்னார் மத்திய சுற்றாடல் அதிகார சபை, மன்னார் பிரதேச செயலகம் மற்றும் மன்னார் நகர சபை இணைந்து நேற்று (15) இந்தப் பணிகளை முன்னெடுத்தன.

இந்த நிகழ்வின் முதல் பகுதியாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மாவட்ட அதிகாரி திருமதி. எம். மேரி அன்ரனிரா 'கடற்கரை பாதுகாப்பு மற்றும் கழிவு முகாமைத்துவம்' முதலான விடயங்கள் பற்றிய விழிப்புணர்வுக் கருத்துரை வழங்கினார்.

பின்னர், கீரி கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள், பாதுகாப்புக் குழு உறுப்பினர்கள், வாழ்வுதயப் பணியாளர்கள், இலக்கு கிராம பயனாளிகள், அரச உத்தியோகத்தர்கள், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் உத்தியோகத்தர்கள், மீனவர்கள், நகரசபை ஊழியர்கள் உட்பட அனைவரும் சேர்ந்து கடற்கரையில் காணப்பட்ட பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் கழிவுப் பொருள்களைச் சேகரித்துத் துப்புரவு செய்தனர்.

சேகரிக்கப்பட்ட கழிவுப் பொருள்கள் மன்னார் நகர சபையின் ஒத்துழைப்புடன் அகற்றப்பட்டன.



## “நாம் அனைவரும் இலங்கையர்கள்”

# கலாசாரப் பரிமாற்ற நிகழ்வு வெலிகமவில்

(அ.அஸ்வர்)

“நாம் அனைவரும் இலங்கையர்கள்” என்ற உணர்வின் ஊடாக நாட்டை அபிவிருத்திக்காக கட்டியெழுப்புதலும் இனங்களுக்கிடையில் கலாசார உறவுகளை உருவாக்குதலும் என்ற தொனிப்பொருளில் கலாசார பரிமாற்ற நிகழ்ச்சி அண்மையில் வெலிகம மீராசாஹிப் ஜும்மா பள்ளிவாசலில் இடம்பெற்றது.

இஸ்லாமியர்களின் சமய சடங்குகள், கலாசாரம், உணவு முறைகள் மற்றும் முஸ்லிம் பெண்களின் ஆடைகள் உள்ளிட்ட கலாசார செயற்பாடுகள், ஒரு முஸ்லிம் மரணிக்கும் தருணம் வரையிலான செயல்முறை, பள்ளிவாசல்களின் முன்மாதிரி போன்ற பல அம்சங்களை உள்ளடக்கியதாக இந்த கலாச்சார பரிமாற்ற நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இதன்போது, வெலிகம பிரதேசத்தின் கௌரவ மகாசங்க ரத்னாய, வெலிகம மாவட்ட செயலாளர் திருமதி நிரோஷா சமந்தி மெண்டிஸ், மாத்தறை உதவி மாவட்ட செயலாளர் திருமதி லக்மாலி தேனுவர உட்பட அரச அதிகாரிகள், பொலிஸார், பிரதேசத்தில் உள்ள அரச மற்றும் தனியார் வங்கிகளின் முகாமையாளர்கள் உட்பட வங்கி அதிகாரிகள், சிவில் அமைப்பு ஆர்வலர்கள் பலர் சமூகமளித்திருந்தனர்.

இஸ்லாமிய கற்கைகள் நிறுவனம் மற்றும் எம்.டபிள்யு.ஆர்.எப்.அமைப்பு என்பவற்றுடன் இணைந்து வெலிகம மீராசாஹிப் ஜும்மா பள்ளிவாசல் பரிபாலன சபை இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தது.




# சமுர்த்திக் குடும்ப மாணவருக்கு உதவி

(எம்.நவாஸ்)

சமுர்த்திக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு ‘சிசுபல சமாஜ சத்காரய’ வேலைத் திட்டத்தின் கீழ் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நிகழ்வு அட்டாளைச்சேனை பிரதேச செயலர் எம்.ஏ.சி.அஹமது ஷாபிர் தலைமையில் பிரதேச செயலகக் கேட்டபார் கூடத்தில் நேற்று (15) நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சமுர்த்தி முகாமையாளர் ஏ.ம்.ஹமீட் மற்றும் ஏனைய முகாமையாளர்கள் , சமுர்த்தி உத்தியோகத்தர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர் .



# எமது பண்பாட்டைப் பேணுவதன் ஊடாக இனத்தின் தனித்துவத்தைக் காக்க முடியும்

## தென்மராட்சிப் பிரதேச செயலர் தெரிவிப்பு

(த.சுபேசன்)

எமது பண்பாடு, பாரம்பரியம் மற்றும் கலைகளைப் பேணுவதன் ஊடாகவே இனத்தின் தனித்துவத்தைக் காத்துக் கொள்ள முடியும்.

இவ்வாறு தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற சாவகச்சேரி சித்திவிநாயகர் கலைமன்றத்தின் முத்தமிழ் விழா நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

சாவகச்சேரி, பெரியமாவடி சித்திவிநாயகர் கலை மன்றம் யுத்த காலங்களையும் தாண்டி இன்றும் கலைச் சேவையை ஆற்றி வருவது பாராட்டத்தக்க விடயம்.

எமது இனத்தின் தனித்துவத்தை பேண வேண்டுமானால் முதலில் எமது கலைகளை பேணிப் பாதுகாக்க வேண்டும்.

இவ்வாறான கலை நிகழ்வுகள் ஊடாக எமது பண்பாடு மற்றும் கலா சாரத்தை எமது அடுத்த தலைமுறைக்கு கடத்த முடியும். அத்துடன் சமூகத்தில் இலை மறை காயாக இருக்கும் கலைஞர்களுடைய திறன்களையும் வளர்த்துக் கொள்ள முடியும்.

யாழ். மாவட்ட அரச அதிபர் ஒவ்வொரு மாதமும் ஒரு பிரதேச செயலகத்தில் பௌர்ணமி விழாவைக் கொண்டாட வேண்டும் என அறிவித்துள்ளார். கடந்த மாதம் நல்லூர் பிரதேச செயலகத்தில் அந்த நிகழ்வு இடம் பெற்றது.

எப்போதும் தொலைபேசி , தொலைக் காட்சி என மூழ்கிக் கிடக்காது மேடை நிகழ்வுகளை ஆற்றுவது மற்றும் இரசிப்பது உள நல மேம்பாட்டுக்கு உறுதுணையாக அமையும். பாடசாலை மாணவர்களும் கல்வி யுடன் ஏனைய கலை மற்றும் விளை யாட்டு துறைகளிலும் ஈடுபட வேண்டும். இதனூடாக சிறந்த ஆளுமை, ஒழுக்கம் மிக்க சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

தற்போது வெள்ளி மற்றும் ஞாயிறு ஆகிய இரு தினங்களும் தரம் 9 வரையான வகுப்பு மாணவர்களை தனியார் கல்வி நிலையங்களுக்கு அழைக்க முடியாது என அரச அதிபர் அறிவித்துள்ளார்.

இந்த விடுமுறை நாள்களில் அறநெறிப் பாடசாலை அல்லது கலை அம்சங்களில் மாணவர்கள் ஈடுபட வேண்டும் என்பதற்காகவே மேற்படி தினங்களில் தனியார் கல்வி நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன.

எனவே பெற்றோர்கள் விடுமுறை தினங்களில் மாணவர்கள் கலை நிகழ்வுகளில் ஈடுபடுவதனையும் அறநெறிப் பாடசாலை செல்வதையும் உறுதிப்படுத்த வேண்டும்.

தற்போது சமூகத்தில் போதைவஸ்து மற்றும் மாணவர்கள் மத்தியில் தொலைபேசி பாவனை ஆகியன பெரிய பிரச்சினைகளாக உள்ளன.

தொலைபேசிப் பாவனையால் மாணவர்கள் மத்தியில் கவனச் சிதறல்கள் ஏற்படுகிறது. கொரோனா காலத்தில் சகல மாணவர்களுடைய கைகளுக்கும் தொலைபேசி சென்றது. அது இன்றும் தொடர்கிறது. இது பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதனை பெற்றோர்கள் உணர வேண்டும்.– என்றார்.

# வீதியைத் திருத்துமாறு பயணிகள் கோரிக்கை

(அஸ்ஹர்இப்றாஹிம்)

கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட பன்சல மாவத்தை கொங்றீட் வீதி சேதமடைந்து பொதுமக்கள் பயணிக்க முடியாத நிலையில் காணப்படுகிறது.

மழை காலங்களில் இவ் வீதியிலுள்ள குழிகளில் நீர் நிறைந்து காணப்படுவதால் வாகன சாரதிகளும் பாதசாரிகளும் பாடசாலை மாணவர்களும் பலவிதமான இன்னல்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

இவ்வீதியில் கல்முனை பொதுச் சந்தை , பௌத்த விகாரை , சிங்கள மகா வித்தியாலயம் , மயானம் , கோயில் என்பன அமைந்துள்ளன.

கொங்றீட் வீதி சேதமடைந்தமையால் உள்ளே காணப்படும் இரும்புக் கம்பிகள் வெளித் தெரியுமளவுக்கு நிலமை மோசமடைந்துள்ளது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ் வீதி விடயத்தில் கூடிய கவனம் செலுத்துமாறு பிரதேச வாசிகள் கேட்டுள்ளனர்.



# தனிப்பட்ட பேராசைக்காக பதவிகளை ஏற்க மாட்டோம்

## உண்மையை மறைப்பதால் ஆபத்து என்கிறார் சஜித்பிரேமதாஸ

கொள்கைகளை மீறிக் கொண்டு நாட்டு மக்களை மறந்துவிட்டு தனிப்பட்ட பேராசைக்காக ஜனாதிபதி பதவியையும் பிரதமர் பதவியையும் பெற தாம் தயாராக இல்லை.

மொட்டுவின் 134 உறுப்பினர்களின் மட்டுப்படுத்தப்பட்ட ஆணையுடன் ஜனாதிபதி கதிரைக்கு சென்ற தற்போதைய ஜனாதிபதி,மொட்டு திருடர்கள் குழுவின் பாதுகாவலராக மாறி தற்போது உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் உண்மையை மறைத்து வருகின்றார்.

நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் கூட ஆணைக்குழு அறிக்கையின் பிரதிகளை பெற்றுக் கொள்ள முடியாத விதமாக மறைத்து வைத்துள்ளனர். உண்மையை மறைப்பதால் தேசிய பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

சதஹம் யாத்தரா நிகழ்ச்சியின் 1500 ஆவது நிகழ்வு நேற்று (15) கேகாலை, கலிகமுவ வட்டராம ரஜ மஹா விகாரையில் இடம்பெற்றது.இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ



இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு–

பூரண அரசாட்சியை தருவதாக கூறினாலும் மக்கள் ஆணையின்றி ஜனாதிபதி பதவியையோ பிரதமர் பதவியையோ ஏனைய பதவியையோ அரச அதிகாரத்தையோ பெற தாம் தயார் இல்லை.

சமய ஸ்தலங்கள் ஊடாக வெளியிடப்படும் சமய செய்திகளின் அடிப்படையில் ஐக்கிய இலங்கையின் தேசிய பாதுகாப்பு பாதுகாக்கப்பட்டாலும் கடந்த காலங்களில் மலட்டுக் கொத்து, மலட்டு அறுவை சிகிச்சை என கூறி உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் நாட்டில் இனங்கள் மற்றும் மதங்களுக்கு இடையில் பிளவை ஏற்படுத்தினர்.

இதனால்தான் போராட்டத்துக்கு முன் நல்லிணக்கம் என்பது கடுமையான வார்த்தை பிரயோகமாக அமைந்து காணப்பட்டது. தேசபிமானம் என்ற பெயரால் இவ்வாறு தாக்கப்பட்ட போதிலும் நாட்டை அடிமைப்படுத்தி நாட்டின் வளங்களை அபகரித்த ஜனாதிபதியையும் குடும்பத்தையும் விரட்டியடிக்க மக்கள் ஒன்றாய் வீதியில் இறங்கிப் போராடினர். இதன் பின்னர் நல்லிணக்கம் என்ற வார்த்தை முக்கியமான அரச கொள்கையாக மாறியுள்ளது.

நாட்டை அழித்த தரப்புடன் ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தால் தாம் தற்போது நாட்டின் ஜனாதிபதி . நாட்டை அழித்த மொட்டுடன் எந்த ஒப்பந்தமும் இல்லை. ஒப்பந்தமொன்று போட வேண்டிய தேவை ஏற்பட்டால் அத்தகையதொரு ஒப்பந்தம் அரசியல் கட்சிகளுடன் அன்றி 220 லட்சம் பேருடன்தான் போடப்படும்.

தற்போது நாட்டில் உள்ள 220 லட்சம் பேரதும் வளங்களை கொள்ளையடித்தவர்கள் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டு இழந்த வளங்களை மீட்பதற்கு தயாராக உள்ளோம்.– என்றார்.

# காரைதீவு பேராசிரியருக்கு நாளை கனடாவில் பாராட்டு!

(வி.ரி.சகா தேவராஜா)



கனடா சுவாமி விபுலானந்தர் கலை மன்றம், கனடாவில் வாழும் காரைதீவைச் சேர்ந்த பேராசிரியர் முனைவர் இளைய தம்பி பாலசுந்தரத்துக்குப் பாராட்டு விழா ஒன்றை நாளை (17) ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கிறது.

கனடா ஒன்றாரியோ தமிழ் இசைக் கலா மன்றத்தில் நாளை மாலை 5 மணிக்கு நிகழ்வு நடைபெறவுள்ளது.

பேராசிரியர் முனைவர் இளையதம்பி பாலசுந்தரம் கல்வியியலாளராகவும், துணிந்த எழுத்தாளராகவும், ஆழ்ந்த ஆய்வாளராகவும், தமிழ் இலக்கியம், மொழியியல், பண்பாடு, இந்து சமயம், சமூகம் போன்ற துறைகளில் கடந்த 50 ஆண்டுகளாக அயராது உழைத்தவர்.

இவர் இதுவரை 22 நூல்களை வெளியிட்டுள்ளார். அவர் பணிகளைப் பாராட்டி விழா எடுக்கப்படுகிறது.

இதேவேளை, இவர் மதுரை உலகத் தமிழ் சங்க இலக்கிய விருதுக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.





# கிழக்கு தனியார் வைத்தியசாலை பிரதிநிதிகளுடன் ஆளுநர் சந்திப்பு

(கே. எ. ஹமீட் )

கிழக்கு மாகாணத் தனியார் வைத்தியசாலைகளின் பிரதிநிதிகளுக்கும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு இடையிலான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் இன்று (16) இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் தனியார் வைத்தியசாலை அதிகாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்டது.

மேலும் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஊடாக தனியார் வைத்தியசாலை பிரதிநிதிகளுக்கு மேலதிக உதவிகள் வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



# 4 ஆவது நாளாகவும் காஷ்மீரில் தொடரும் பயங்கரவாதிகளுடனான பரஸ்பர மோதல்!

ஜம்மு - காஷ்மீரின் அனந்தநாக் மாவட்டத்தில் பயங்கரவாதிகளுக்கும் இந்திய பாதுகாப்பு தரப்பினருக்கும் இடையிலான பரஸ்பர தாக்குதல் சம்பவங்கள் நான்காவது நாளாகவும் தொடர்கின்றது.

பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் இதுவரையில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர்.

அதேநேரம், நேற்றைய தினம் சுற்றிவளைப்பில் ஈடுபட்ட இராணுவத் தினரில் ஒருவர் காணாமல் போயுள்ளார். இருவர் காயமடைந்துள்ளனர்.

தொடர்ந்தும் இந்த பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. பயங்கரவாதிகளை அடையாளம் காண்பதற்காக பாதுகாப்பு தரப்பினர் ஆளில்லா விமானக் கருவிகளை பயன்படுத்தியுள்ளனர்.

இந்த பயங்கரவாத செயற்பாடுகளுக்கு பின்னணியில் லஷ்கர் - இ - தொய்பா அமைப்பினர் உள்ளனர் என இந்திய பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

# மக்களவை தேர்தலை முன்கூட்டியே நடத்த வாய்ப்பு!

## காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் சசிதரூர் தகவல்



மக்களவை தேர்தலுக்கு இன்னும் 6 முதல் 9 மாதங்கள் இருக்கின்றன. ஆனால் அரசு அதனை முன்கூட்டியே நடத்தலாம் என்று திருவனந்தபுரம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் சசிதரூர் தெரிவித்துள்ளார்.

மறுசீரமைக்கப்பட்ட காங்ரகிரஸ் கட்சியின் செயற்குழுவின் முதல் கூட்டம் விரைவில் தேர்தலைச் சந்திக்க உள்ள தெலங்கானாவில் இன்று நடைபெறுகிறது.

மூன்று நாட்கள் நடைபெறும் இந்த முக்கியமான கூட்டத்தில் விரைவில் சட்டப்பேரவைத் தேர்தலைச் சந்திக்க உள்ள தெலங்கானா, ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர், மிசோரம் ஆகிய மாநிலங்களுக்கான தேர்தல் வியூகத்தை வகுப்பது. இண்டியா கூட்டணி குறித்த விவாதம் கூட்டத்தில் முக்கிய இடம் பிடிக்கும் என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில் காங்கிரஸ் மூத்த தலைவர்களில் ஒருவரான சசிதரூர் கூறுகையில், நிச்சயமாக நாட்டில் நிலவிவரும் தற்போதைய அரசியல் மாற்றங்கள், தேர்தலுக்கான வெற்றி வாய்ப்புகள், இண்டியா கூட்டணியில் எங்களைப் பிரதிநிதித்துவம் ஆகியவை முக்கியமான விவாதத்துக்கானவையாக இருக்கும்.

வழக்கமான காலப்படி தேர்தலுக்கு இன்னும் ஆறு முதல் ஒன்பது மாதங்கள் இருக்கின்றன என்று நாங்கள் நம்புகிறோம். ஆனால் அரசு தேர்தலை முன்கூட்டியே நடத்த வாய்ப்பு இருக்கிறது என்று நாங்கள் கேள்விப்படுகிறோம். இப்படி இருந்தாலும் நாங்கள் விரைவாக தயாராக இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# மோடிக்கு முதலிடம்!



உலகில் மிகவும் பிரபலமான தலைவர்கள் பட்டியலில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி முதலிடத்தை பிடித்துள்ளார்.

அமெரிக்காவைச் சேர்ந்த மோர்னிங் கன்சல்ட் வெளியிட்ட குளோபல் லீடர் அப்ரூவல் கணிப் பின்படி, இந்திய பிரதமர் மோடி 76 சதவீத புள்ளிகள் பெற்று முதலிடத்தில் இருக்கிறார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோடிக்கு அடுத்தபடியாக சுவிட்சர்லாந்து ஜனாதிபதி அலைன் பெர்செட் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் 40 புள்ளிகளுடன் 7 ஆவது இடத்திலும், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ 10 ஆவது இடத்திலும் இருகின்றனர் என அந்த கணிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியல் புலனாய்வு ஆராய்ச்சி நிறுவனமான மோர்னிங் கன்சல்ட் 22 உலகத் தலைவர்களை வைத்து நடத்திய ஆய்வில் மேற்கண்ட தகவலகள் வெளியாகி உள்ளன.

# ரஷ்யாவின் போர் கப்பல்கள் மீது உக்ரைன் ஆயுதப்படை தாக்குதல்!




ரஷ்யாவின் இரண்டு வாசிலி பைகோவ் ரக இராணுவ கப்பல்கள் மீது உக்ரைன் ஆயுதப்படை நேற்று தாக்குதல் நடத்தியுள்ளது.

உக்ரைன் ரஷ்யா இடையிலான போர் தாக்குதல் தீவிரமடைந்து வரும் நிலையில் ரஷ்யாவுக்கு சொந்தமான வாசிலி பைகோவ் ரக இராணுவ போர் கப்பல் மீது உக்ரைன் ஆயுதப்படைகள் தாக்குதல் நடத்தியுள்ளன. இந்த தாக்குதலில் 2 வாசிலி பைகோவ் ரக இராணுவ போர் கப்பலும் பலத்த சேதமடைந்துள்ளன என உக்ரைன் விமானப்படையின் முலோபாய கட்டளை தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் ரஷ்யாவின் இரண்டு வாசிலி பைகோவ் ரக இராணுவ போர் கப்பல்களை உக்ரைன் தாக்கும் காட்சிகள் வெளியாகியுள்ளது.

## உலகளவில் அதிகளவு போர் ஆயுதங்களை ஏற்றுமதி செய்யும் முக்கியமான 5 நாடுகள்!



உலகளவில் அதிகளவான போர் ஆயுதங்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளின் விபரம் வெளியாகியுள்ளது.

அந்த வகையில் முக்கியமான 5 நாடுகள் இந்த தரவரிசையில் இடம் பிடித்துள்ளன. இவை உலகத்தில் நடைபெறக்கூடிய பெரும்பாலான போர்களை தீர்மானிக்கக்கூடிய ஆற்றல் கொண்டிருக்கின்றன என தெரிவிக்கப் படுகின்றன.

அந்தவகையில் சீனா 5 ஆம் இடத்தில் உள்ளது. சீனாவின் போர் தளபாடங்கள் பெருமளவிலானவை அமெரிக்க போர் தளபாடங்களை முன்னிலைப்படுத்தி தயாரிக்கப்படுகின்றன என தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதனையடுத்து 4 ஆம் இடத்தில் ஜெர்மனியும், மூன்றாம் இடத்தை பிரான்ஸும் கைப்பற்றியுள்ளன.

ஒட்டுமொத்த ஆயுத ஏற்றுமதியில் பிரான்ஸின் பங்களிப்பு 8.2 சதவீதம் ஆகும். மேலும் அந்நாடு, போர்க்கப்பல் ஏற்றுமதியில் அமெரிக்காவுக்கு அடுத்த படியாக உள்ளது.

இதனை தொடர்ந்து இரண்டாம் இடத்தில் ரஷ்யா உள்ளது. ஒட்டுமொத்த ஆயுத ஏற்றுமதியில் ரஷ்யாவின் பங்களிப்பு 20 சதவீதம் ஆகும்.

உலகம் முழுவதும் சுமார் 60 இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு ரஷ்யா ஆயுதங்களை ஏற்றுமதி செய்து வருகின்றது.

இந்த தரவரிசையில் அமெரிக்கா முதலாம் இடத்தை பிடித்துள்ளது. ஒட்டுமொத்த ஆயுத ஏற்றுமதியில் அமெரிக்காவின் பங்களிப்பு 37 சதவீதம் ஆகும். உலகம் முழுவதும் சுமார் 96 நாடுகளுக்கு அமெரிக்கா ஆயுதங்களை ஏற்றுமதி செய்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## விமான நிலையத்தில் திருடும் அதிகாரிகள்!



அமெரிக்க விமான நிலையம் ஒன்றில் பயணிகளின் உடைமைகளை சோதனை செய்யும் அதிகாரிகள், பைகளில் இருந்து பணம் மற்றும் பொருட்களை திருடும் காணொளி தற்போது சமூக ஊடகங்களில் பரவி வருகிறது.

அமெரிக்காவின் மியாமி சர்வதேச விமான நிலையத்தில் கடந்த ஜுன் 29 அன்று நடந்த இந்த திருட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பயணிகளின் உடைமைகளை சோதனை செய்ய எக்ஸ்ரே இயந் திரத்தில் வைக்கும் போது, அதனை இருவரும் சோதனை செய்கின்றனர்.

அப்போது ஒவ்வொரு பையையும் சோதனை செய்யும் போது இருவரும், அதில் இருந்து கிடைக்கும் பணத்தை திருடி தங்களது பைகளில் வைத்து கொள்ளும் காட்சி சிசிரீவி கருவியில் பதிவாகியுள்ளது.

இதனையடுத்து அவர்களை அந்நாட்டு பொலிஸார் கைது செய்து விசாரணை செய்தபோது , தினமும் சராசரியாக ஆயிரம் அமெரிக்க டொலருக்கும் அதிகமான பணத்தை திருடினோம் என்று அவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர்.